## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பரிசு மற்றும் ஊக்குவிப்பு நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பரிசு மற்றும் ஊக்குவிப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 507,201 தொகையான கிடைக்கப்பெறாதிருந்த ஊக்குவிப்புப் படி மீளக் கிடைக்கப்பெற்றமை மற்றும் ரூபா 280,416 தொகையான கிடைக்கப்பெறாதிருந்த ஊக்குவிப்புப் படி மீளச் செலுத்தப்பட்டமை என்பன காசுப்பாய்ச்சல் கூற்றில் தனித்தனியாகக் காண்பிப்பதற்குப் பதிலாக ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு ரூபா 226,795 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிருவாகச் செலவினம், விஷேட மதிப்பீடு மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளுக்கான உள்ளபடியான செலவினம் ரூபா 221,750 ஆக இருந்த போதிலும் ரூபா 920,995 தொகையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டில் அந்தச் செலவினம் ரூபா 699,245 இனால் கணக்குகளில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 1.2.2 அதிகார பலமின்றிய கொடுப்பனவுகள்

(அ) 2011 ஒக்தோபர் 05 ஆந் திகதிய எல்.டீ.பீ. 24/51 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் 3 ஆவது கட்டளையின் (1) ஆவது பந்தியின் (உ) மற்றும் (ஊ) உப பந்திகளில் குறிப்பிடப்பட்ட வருடாந்த அங்கீகரிக்கப்பட்ட செலவின அளவினை விஞ்சி ரூபா 43,450 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட அளவு | கொடுப்பனவு செய்யப்பட்ட அளவு | அதிகாரமின்றி கொடுப்பனவு செய்யப்பட்ட அளவு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பதவியணியினர் விளையாட்டு களியாட்ட மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் | 50,000 | 62,500 | 12,500 |
| சிறப்பான மற்றும் விஷேட மதிப்பீடு | 50,000 | 80,950 | 30,950 |
| | 100,000 | 143,450 | 43,450 |

(ஆ) 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொதுநிருவாகச் சுற்றுநிருபத்தின் 06(ஈ) உப பந்தியின் பிரகாரம் சகல படிகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தொடர்பாக பொது நிருவாக அமைச்சின் மூலம் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் விசாரித்து ஆலோசனை வழங்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமலும் அங்கீகரிக்கப்பட்ட பாதீடின்றியும் உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 128,146,204 ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2001 யூலை 10 ஆந் திகதிய 17/2001 ஆம் இலக்க பொதுநிருவாகச் சுற்றுநிருபம் | இந்த சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு முரணாக 60 வயதின் பின்னர் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் 2012 திசெம்பர் மாதம் தொடக்கம் நிதியத்தின் நிதிக்கட்டுப்பாட்டாளராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த உத்தியோகத்தருக்கு மாதாந்தம் ரூபா 35,000 படி கொடுப்பனவு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 128,146,204 தொகையான ஊக்குவிப்புப் பணத்திலிருந்து ஒவ்வொரு ஊழியர்களுக்கும் உரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவின் அளவு உழைக்கும் போது செலுத்தும் வரி கணிப்பீட்டிற்காக உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபம் 3.2(ஆ) ஆம் பிரிவு | செலுத்துவதற்குள்ள பணம் மற்றும் ஏனைய பொறுப்புக்களைத் தீர்த்ததன் பின்னர் சேமிக்கப்படுகின்ற மேலதிக பணம் தாமதமின்றி ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றுதல் அல்லது மேலதிக நிதியத்தை வெளி நிறுவனங்களில் முதலீடு செய்திருக்கையில் அவை முதிர்ச்சியடைந்ததன் பின்னர் உடனடியாக ஒன்றிணைந்த நிதியத்திற்கு மாற்றவேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 3,719,592 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,386,229 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,666,637 தொகையான குறைவு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது ஊக்குவிப்புப் படிச் செலவினம் ரூபா 4,850,171 தொகை அல்லது 8 சதவீத்தினால் அதிகரித்திருந்தமை மிகையின் குறைவிற்கு அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 செயற்பாடற்ற வளங்கள்

நிதியத்தில் ரூபா 46 மில்லியனுக்குக் கிட்டிய மிகைப் பணம் திறைசேரியின் மிகைக் கணக்கில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலமாக நடைமுறைக் கணக்கில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடமிருந்து உரிய அங்கீகாரம் பெறப்படாமல் மோட்டார் வாகனங்களைத் தயாரித்தல், உற்பத்தி செய்தல், பொருத்தி இணைத்தல், புதிதாக வடிவமைத்தல், மெருகூட்டுதல், தோற்றங்களை மாற்றுதல் அல்லது வடிவமைப்புக்களை மாற்றுதல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கிய மோட்டார் வாகனம் தொடர்பாக ஏற்படுகின்ற பல்வேறு பிழையான செயற்பாடுகளைக் குறைப்பதற்காகவும், அவ்வாறான செயற்பாடுகளில் நிலைத்திருக்கின்ற நபர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் இந்த நிதியம் தோற்றுவிக்கப்பட்ட அடிப்படை நோக்கமாக இருந்த போதிலும் அவ்வாறான எவ்வித நடவடிக்கைகளும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், இந்த நிதியம் தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் மற்றும் செயற்பாடுகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பரிசு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு நிதியத்திற்குரிய செயல் நடவடிக்கைத்திட்டம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வுப் பந்தி

மோட்டார் வாகனம் தொடர்பாக பல்வேறு முறையில் பிழையாக செயற்பாடுகளை மேற்கொள்கின்ற நபர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக எனது எஸ்சீ/சீ/டீஎம்ரீ/2010/03, எஸ்சீ/சீ/டீஎம்ரீ/2010/04 மற்றும் ரீஎச்/டீ/ஆர்எம்வீ/06 ஆம் இலக்க பல கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக போதியளவான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு

(ஆ) கணக்கீடு